## முக்கிய தொலைபேசி எண்கள்

| | |
|---|---|
| பெண்கள் மறுமலர்ச்சி நிலையம் (WCC) | 04-228 0342 |
| பெண்கள் சேவை நிலையம் (PPW) | 04-398 8340 |
| சட்ட உதவி மையம் | 04-210 9100 |
| சட்ட ஆலோசனை மையம் | 04-261 7451 |

### அரச மலேசிய காவல் இலாக்கா

| | |
|---|---|
| • பினாங்கு(தலைமை காவல் நிலையம்) | 04-222 1522 |
| • ஜோர்ஜ் டவுன் (கிழக்கு) | 04-218 1822 |
| • பாலேக் பூலாவ்(மேற்கு) | 04-866 2222 |
| • செபராங் பிறை வடப்பகுதி | 04- 576 2222 |
| • செபராங் பிறை மையப்பகுதி | 04-538 2222 |
| • செபராங் பிறை தெற்குப்பகுதி | 04-585 8222 |

### காவல் நிலையங்கள்

| | |
|---|---|
| • டத்தோ கிராமட் | 04-227 1422 |
| • பட்டாணி ரோடு | 04-218 1844 |
| • கம்போங் பாரு | 04-828 8522 |
| • பூலாவ் திக்குஷ் | 04-228 0422 |
| • ஆயர் ஈத்தாம் | 04-826 8522 |
| • பண்டார் பாரு | 04-828 4522 |
| • புக்கிட் பெண்டேரா | 04-829 9422 |
| • பத்து பிரிங்கி | 04-881 1434 |
| • தஞ்சோங் தோக்கோங் | 04-890 3444 |
| • சுங்கை நிபோங் | 04-643 0222 |
| • ஜெலுத்தோங் | 04-282 5922 |

### சமூக நல இலாக்காவின் அலுவலகங்கள்

| | |
|---|---|
| • கொம்தார் | 04-650 5258 |
| • ஜோர்ஜ் டவுன் | 04-226 4531 |
| • பாலேக் பூலாவ் | 04-866 8442 |
| • புக்கிட் மெர்தாஜாம் | 04-538 2584 |
| • பட்டர்வொர்த் | 04- 575 8715 |
| • ஜாவி / நிபோங் திபால் | 04-582 1798 |

### அரசாங்க மருத்துவமனைகள்

| | |
|---|---|
| • பினாங்கு | 04-222 5333 |
| • செபராங் ஜெயா | 04-382 7333 |
| • பாலேக் பூலாவ் | 04-866 9333 |
| • புக்கிட் மெர்தாஜாம் | 04-549 7333 |
| • சுங்கை பாகாப் | 04-582 4333 |

## WCC செய்யும் உதவிகள்

நாங்கள் கீழ்கண்ட சேவைகளை உங்களுக்கு வழங்குகிறோம்

விழிப்புணர்வு மற்றும் மனநல ஆலோசனைகள்

சட்ட ஆலோசனைகள்

தற்காலிக வசிப்பிடம்

**சேவைகள் யாவும் இலவசம். அனைத்து இரகசியங்களும் காக்கப்படும்**


Women's Centre for Change

241, Jalan Burma, 10350 Penang.
Tel: 04-228 0342/011-3108 4001
04-398 8340 / 016-439 0698
E-mel: wcc@wccpenang.org
Laman Web: www.wccpenang.org



**பெண்கள் மறுமலர்ச்சி நிலையம் (WCC)**
241, Jalan Burma ,10350 Penang
Tel: 04-228 0342
011-3108 4001
E-mail: wcc@wccpenang.org
Website: www.wccpenang.org



**Pusat Perkhidmatan Wanita (PPW)**
13 Lorong Sutera 6, Taman Sutera,
13700 Seberang Jaya, Penang
Tel: 04-398 8340 / 016-439 0698
E-mail: ppw@wccpenang.org


Women's Centre for Change
பெண்கள் மறுமலர்ச்சி நிலையம்

ஆதரவாளர்
மலர்
செயல் திட்டம்

# கற்பழிப்பு

## இது உங்களின் தவறு அல்ல!

## கற்பழிப்பு என்றால் என்ன ?

கற்பழிப்பு என்பது உடலுறவு சம்பந்தப்பட்ட ஒரு வன்முறைக் குற்றமாகும். உங்களுக்கு உடன்பாடில்லாமல், விருப்பமில்லாமல் உங்களது மர்ம உறுப்பில் ஓர் ஆண் தன்னுடைய மர்ம உறுப்பை நுழைப்பதே கற்பழிப்பு என சட்டம் சொல்கிறது. நீங்கள் 16 வயதுக்கு உட்பட்டவர்களாயின், உங்கள் விருப்பத்தோடு அல்லது விருப்பமின்மையோடு எந்தவொரு கற்பழிப்புச் சம்பவம் நிகழ்ந்தாலும் அது குற்றமே என சட்டம் சொல்கிறது.

## பாலியல் வன்முறையோடு சம்பந்தப்பட்டுள்ள இதர குற்றங்கள்

மனிதத் தன்மைக்கு முரணாக ஒருவரை வற்புறுத்தி அவரது வாயில், மர்ம உறுப்பில் அல்லது ஆசன வாயில் எந்தவொரு பொருளையும் வலுக்கட்டாயமாக நுழைப்பது, உங்களை மனதளவில் அதிகம் பாதித்தாலும், அது சட்டப்படி கற்பழிப்பு குற்றமாகாது, இம்மாதிரியான காரியங்கள் பாலியல் பலாத்காரங்கள், பண்பை மீறுதல், மனிதத் தன்மைக்கு முரணான உடலுறவு, கற்பழிப்பு முயற்சி போன்ற குற்றங்களின் கீழ்வரையறுக்கப்படலாம்.

## கற்பழிப்பு என்பது...

- உடலுறவு **அல்ல.** அது ஒரு வன்முறை. கற்பழிக்கிறவன் தன் எண்ணம் ஈடேர கடுமையையும் வன்முறையையும் பயன்படுத்துவான். உடலுறவு உங்கள் சுயமரியாதையைக் குலைக்க ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படும். உங்களை வேதனை படுத்தவும், சுயகௌரவத்தைக் குலைக்கவும் கோபத்தோடு கூடிய வன்முறையில் பாதிப்புக்குள்ளாக்குவதே கற்பழிப்பு எனப்படுகிறது.

- இது உங்களின் தவறு **அல்ல.** நீங்கள் கற்பழிப்பை தூண்டுவதில்லை. உங்களின் கவர்ச்சியான உடையோ நடவடிக்கையோ ஒரு போதும் கற்பழிப்புக்குக் காரணமாகாது. பெண்ணின் எந்த நடவடிக்கையும் ஒரு ஆணுக்கு அவளை கற்பழிக்கும் உரிமையை கொடுப்பதில்லை.

- கற்பழிப்பு தெரியாத அறியப்படாத நபரால் தான் நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. பாதிக்கப்பட்ட பெண்களில் பலர் தங்களை கற்பழித்தவனை நன்கு அறிந்திருக்கின்றனர். கற்பழிப்பவன் உங்கள் நண்பராக, அயலானாக, காதலனாக, ஏன் உங்கள் குடும்ப உறுப்பினனாக அல்லது சொந்த பந்தங்களில் ஒருவனாகக் கூட இருக்கலாம்.

- கற்பழிப்புச் சம்பவங்கள் வாலிபப் பருவ பெண்களிடத்தில் தான் நடைபெறுகின்றன என சொல்லமுடியாது. ஏனெனில் வயது கடந்த பெண்களிடத்திலும் மற்றும் சிறார்களுக்கும் கூட இந்த கற்பழிப்பு சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

- கற்பழிப்பு இரவு நேரங்களிலும், தனிமையான, மறைப்புறமான இடங்களில் தான் நடைபெறும் என்று சொல்வதற்கில்லை. கற்பழிப்பு எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் கூட நிகழலாம். பாதுகாப்பான இடங்களான வீடு, பள்ளிக்கூடம், வேலையிடம் என கற்பழிப்பு எவ்விடத்திலும் நடக்கலாம். கற்பழிப்பிற்கு நேரம், இடம் என ஒரு வரையறை இல்லை.

## ஒருவேளை நீங்கள் கற்பழிக்கப்பட்டிருந்தால்...

### உங்களது உடலைச் சுத்தம் செய்யாதீர்கள்/உடைகளை மாற்றாதீர்கள்.

உங்கள் முதல்கட்ட நடவடிக்கை உங்களை சுத்தம் செய்வதாய் தான் இருக்கும் ஆனால், அதைக் காட்டிலும் முக்கியம் என்னவெனில் மருத்துவரிடம் சென்று பரிசோதிப்பதே. இரத்தக்கறைகள், விந்துக்கள், நூல், தலைமுடி, போன்றவை யாவும் கற்பழிப்பை நிரூபிக்கும் முக்கிய ஆதாரங்களாகும்.

### ஒரு நண்பர் / உறவினரின் உதவியை நாடுங்கள்

உங்களை மருத்துவமனைக்கும், காவல் நிலையத்திற்கும் அழைத்து செல்லுமாறு அந்த நண்பரைக் கேளுங்கள். நடந்த சம்பவத்தை நினைவுக் கூறும் போதும், அவற்றை விவரிக்கும் போதும் ஒருவித மன உளைச்சலுக்கு உள்ளாகவும் நேரிடும்.

### உடனடியாக ஒரு அரசாங்க மருத்துவமனையின் அவசரப் பிரிவு பரிசோதனைக்கு செல்லுங்கள்

மருத்துவமனை ஊழியர்கள் நடந்த சம்பவத்தை போலீசாரிடம் முறையிடக் கூடும். சில சமயங்களில் காவல் துறையினரின் குற்ற அறிக்கைகள் மருத்துவமனைகளிலும் பதிவு செய்யப்படலாம் அல்லது நீங்கள் நேரடியாகவே காவல் நிலையத்திற்குச் செல்லலாம். பின்னர் நீங்கள் மருத்துவமனைக்குப் போகும் போது, ஒரு பெண் காவல் அதிகாரி உங்களுடன் துணைக்கு வருவார்.

## மருத்துவமனையில்

உங்களை மருத்துவர்கள் பரிசோதிப்பதற்கு முன்பதாக, ஒரு அனுமதிப் படிவம் உங்களிடம் கொடுக்கப்படும். கிடைக்கப் பெற்ற விபரங்கள் காவல் துறையினரின் புலன் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும். மருத்துவர் உங்களது அந்தரங்க இடங்களைப் பரிசோதிப்பார். உங்களது ஆடைகளும் சோதனைக்குட்படும்.

## காவல் துறையினரின் புலன் விசாரணை

காவல் துறையினரின் முதல் கற்பழிப்பு முறையீட்டுக்குப் பின், ஒரு பெண் காவல் அதிகாரி (புலன் விசாரணைப் பிரிவு) உங்களது சம்பவத்தை விசாரிப்பார். எல்லா விபரங்களும் சேகரிக்கப்படும். நீங்கள் சில வேளைகளில் குற்றவாளியை அடையாளங்காண காவல் நிலையத்திற்கு அழைக்கப்படலாம்.

## காவல் துறையினரின் புலன் விசாரணைக்குப் பின்பு

அரசாங்கம் தன் தரப்பு வழக்கறிர் மூலம் உங்கள் முறையீட்டை விசாரிக்க கடமைப் பட்டுள்ளது. குற்றச்சாட்டை வெளியிட முடியுமா அல்லது முடியாதா என்பதை அரசுத் தரப்பு வக்கீல் முடிவெடுப்பார். போதுமான ஆதாரங்கள் இருந்தால் அரசு வக்கீல் குற்றச்சாட்டை வெளியிட முடிவு செய்வார்.

## நீதிமன்றத்தில்

நீங்கள் முறையீடு செய்தவராகையால் நீதிமன்றத்திற்கு தகுந்த ஆதாரங்களோடு சாட்சிக் கொடுக்க அழைக்கப்படுவீர்கள். உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் தேவைபட மாட்டார். ஆனாலும் வழக்கிற்கு முன்னும், வழக்கு நடந்துக் கொண்டிருக்கும் போதும் உங்களது சாட்சிக்கு உறுதுணையாக ஒரு வழக்கறிஞர் ஏற்படுத்தப்படுவார் நீங்கள் கற்பழிப்பைக் குறித்தான ஆதாரங்களை வெளியிடும் போது, ஒருவேளை நீதிமன்றம் அவையிலுள்ள பொதுமக்களை வெளியேற்றக்கூடும்.

## கற்பழிப்புக் குற்றத்திற்கான தண்டனைகள்

பேனல் கோடு செக்ஷன் 376–படி கற்பழிப்பு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அதிகபட்சமாக இருபது ஆண்டுகள் சிறைத் தண்டனையும் சவுக்கடியும் கிடைக்கக்கூடும்.

குறிப்பு : *மணவாழ்க்கையில் கற்பழிப்பை மலேசியச் சட்டம் அங்கீகரிப்பதில்லை. ஆனால் பேனல் கோடு செக்ஷன் 375 படி ஒரு கணவன் தன் மனைவியை காயப்படுத்தினாலோ, மிரட்டினாலோ, அல்லது காயப்படுத்தி உடலுறவு கொண்டாலோ அவருக்கு ஐந்து வருட சிறைத் தண்டனை கிடைக்கக்கூடும்.*

### கற்பழிப்பு ஒரு புரிதல்

*நீங்கள் கற்பழிக்கப்பட்டிருப்பின் கோபம், வேதனை, கலக்கம், குழப்பம், குற்றவுணர்வு, வெட்கம் போன்றவற்றால் ஆட்கொள்ளப்பட்டிருப்பீர்கள். தனித்தும், மற்றவர்களிடத்தே சேராமலும் இருப்பீர்கள். இவைகள் வழக்கமாய் ஏற்படக்கூடியவைகளே.*

*நினைவில் கொள்ளுங்கள், கற்பழிப்பு உங்களுக்கெதிரான ஒரு குற்றம். அது உங்களின் தவறு அல்ல. உங்கள் உணர்வுகளைப் பகிர்ந்துக் கொண்டு, உங்களுக்கு வழிகாட்ட ஒரு நம்பிக்கையானவரைத் தேடுங்கள் அல்லது* WCC *உதவியை நாடுங்கள்*